**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 303/2024**

**Prosecution witness : அ.சா.1** **Date : 14.08.2025.**

| | |
|---|---|
| **Name : சம்பத்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused is in custody, accused counsel represent to examine the witness petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பெத்தான் வளவில் குடியிருந்து பைனான்ஸ் நடத்தி வருகிறேன். கடந்த 2019ம் வருடம் எனது பைனான்சில் வேலை செய்யும் குமுதவள்ளி என்பவர் போன் மூலமாக ஒரு பையன் பணம் ரூ.10,000/- பைனான்சில் உள்ள டிராவில் வைத்திருந்ததை திறந்து எடுத்துச் சென்றுவிட்டதாக சொன்னார். அந்த டிராவின் சாவி திறந்த சமயத்தில் அதனை பயன்படுத்தி எடுத்துச் சென்றுவிட்டார். அந்த சமயம் குமுதவள்ளி என்பவர் கீழே பாத்ரூம் செல்ல சென்ற போது பணத்தை திருடியதாக சொன்னார். அந்த நபர் வெளியே இருந்து உள்ளே வந்து பணத்தை திருடியதாக தெரிந்து கொண்டேன். பிறகு இது சம்மந்தமாக குமுதவள்ளி ஜலகண்டாபுரம் காவல் நிலையம் சென்று எழுத்து பூர்வமாக புகார் மனு கொடுத்தார்.

2) அழகேசன் என்பவர் என்னுடன் உள்ள பங்குதாரர் ஆவார். அவர் இந்த வழக்கில் காவல் துறையினர் பணம் திருடப்பட்டது கிடைக்கப்பெற்றதாக தெரிந்து கொண்டு மனு தாக்கல் செய்து நீதிமன்றம் மூலமாக பெற்றுச் சென்றார். குமுதவள்ளி என்பவர் திருடிய நபரை கையும் களவுமாக பிடித்து தகவல்

சொன்னதன் பேரில் நான் வந்து திருடிய நபரை பார்த்தேன். தற்போது எனக்கு நீண்ட நாட்கள் ஆனதால் நினைவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

3) போலீசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்று விசாரித்தனர் என்றால் திருடு போன அன்று விசாரித்தனர். அதன் பின்னர் விசாரிக்கவில்லை. தகவல் கிடைத்த போது நான் வீட்டிலிருந்தேன். போலீசார் வர சொன்னதால் நான் நேரடியாக காவல் நிலையம் சென்றேன். திருடு சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது. குமுதவள்ளி சொல்லி தான் தெரியும்.

4) குமுதவள்ளி என்பவர் திருடிய நபரை கையும் களவுமாக பிடித்து தகவல் சொன்னதன் பேரில் நான் வந்து திருடிய நபரை பார்த்ததாக போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் ஆமாம். பணத்தை திருடிய நபரை எனது பைனான்சில் குமுதவள்ளி என்பவர் பிடித்து வைத்திருந்தது சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது. என் பைனான்சில் பணத்தை எடுத்தவரை நான் காவல் நிலையத்தில் தான் பார்த்தேன்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 303/2024**

**Prosecution witness : அ.சா.2** **Date : 14.08.2025.**

| | |
|---|---|
| **Name : அழகேசன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused is in custody, accused counsel represent to examine the witness petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் எடப்பாடி மூலக்கடை வீதியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 2019ம் வருடம் எனது பைனான்சில் வேலை செய்யும் குமுதவள்ளி என்பவர் போன் மூலமாக ஒரு பையன் பணம் ரூ.10,000/- பைனான்சில் உள்ள டிராவில் வைத்திருந்ததை திறந்து எடுத்துச் சென்றுவிட்டதாக சொன்னார். அந்த டிராவின் சாவி திறந்த சமயத்தில் அதனை பயன்படுத்தி எடுத்துச் சென்றுவிட்டார். அந்த சமயம் குமுதவள்ளி என்பவர் கீழே பாத்ரூம் செல்ல சென்ற போது பணத்தை திருடியதாக சொன்னார். அந்த நபர் வெளியே இருந்து உள்ளே வந்து பணத்தை திருடியதாக தெரிந்து கொண்டேன். பிறகு இது சம்மந்தமாக குமுதவள்ளி ஜலகண்டாபுரம் காவல் நிலையம் சென்று எழுத்து பூர்வமாக புகார் மனு கொடுத்தார்.

2) அழகேசன் என்பவர் என்னுடன் உள்ள பங்குதாரர் ஆவார். அவர் இந்த வழக்கில் காவல் துறையினர் பணம் திருடப்பட்டது கிடைக்கப்பெற்றதாக தெரிந்து கொண்டு மனு தாக்கல் செய்து நீதிமன்றம் மூலமாக நான் இடைக்கால பொறுப்பில் பெற்றுச் சென்றேன். காவல் நிலையத்தில் வைத்து திருடிய நபரை பார்த்தேன். தற்போது பார்த்தால் அடையாளம் சொல்ல இயலும். நான் இடைக்கால

பொறுப்பில் பெற்றுச் சென்ற பணம் ரூ.10,000 (16 –500 ரூபாய் தாள்கள், மற்றும் 1 –2000 ரூபாய் தாள்) கொண்டு வந்துள்ளேன். அது **சா.பொ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

3) போலீசார் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. தகவல் கிடைத்த போது நான் வீட்டிலிருந்தேன். போலீசார் வர சொன்னதால் நான் நேரடியாக காவல் நிலையம் சென்றேன். குமுதவள்ளி என்பவர் திருடிய நபரை கையும் களவுமாக பிடித்து தகவல் சொன்னதன் பேரில் நான் வந்து திருடிய நபரை பார்த்ததாக போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் ஆமாம். பணத்தை திருடிய நபரை எனது பைனான்சில் குமுதவள்ளி என்பவர் பிடித்து வைத்திருந்தது சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது. என் பைனான்சில் பணத்தை எடுத்தவரை நான் காவல் நிலையத்தில் தான் பார்த்தேன்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.